விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 22 ரபிஉல் 5 இதழ் 270

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8-11 1986

## "பிரிவினையற்ற தமிழ்ப் பிராந்தியமே தமிழ் மக்களின் தாயகமாக அமையவேண்டும்"

கொழும்பு, வெள்ளி "எவ்வகையிலும் பிரிக்கப்படாத ஒரு தனிப் பிராந்தியமே தமிழ் மக்களின் தாயகமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையை ஒரு கருத்துடைய அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ளவேண்டும்"

இவ்வாறு தெரிவித்து இலங்கைத் தமிழர்களின் மத்தியில் மிகவும் பிரபல்யமாக விளங்கும் போராளிகள் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கை அரசாங்கத்தின் அரசியல் தீர்வுக்கான உத்தேச அதிகாரப் பரவலாக்கும் யோசனைகளை நிராகரித்துள்ளதென சென்னை இந்துப் பத்திரிகை தெரிவித்துள்ளது

இப் பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தின் உத்தேச யோசனைகளை மற்றைய போராளிகள் குழுக்களும் நிராகரித்துள்ளன என கூறியுள்ளது. ஈரோஸ், ஈ.பி ஆர் எல். எவ், ரெலோ ஆகிய மூன்று அமைப்புக்களையும் கொண்ட ஈழ தேசிய விடுதலை முன்னணி தாம் திம்புப் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பித்த நாலம்ச அடிப்படை கோரிக்கைகளையும் இலங்கை அரசு

(5-ம் பக்கம் பார்க்க)

# ● சிப்பாய்கள், பொருள்கள் சகிதம் வந்த கப்பல்மீது புலிகள் தாக்குதல்

# கடற்படைப்படகு சேதம்

## படையினர் பலர் காயம்

(வல்வெட்டித்துறை நிருபர்)

**வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு சிப்பாய்களையும், பொருட்களையும் ஏற்றிவந்த கடற்படைக் கப்பல்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலையடுத்து, கப்பல்கள் நிலைகொள்ள முடியாது வெகுதூரம் பின்நோக்கி நகர்ந்து சென்றன.**

கப்பல்களிலிருந்து பொருட்களை ஏற்றி கரைநோக்கி வந்த படகும் சேதமுற்று மீண்டும் கப்பல் நின்ற இடத்திற்குத் திரும்பியது.

இதையடுத்து இரண்டு பெரிய பீரங்கிக்கப்பல்களிலிருந்து கரைநோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ரோந்துவிசைக் கப்பலிலிருந்து கரைநோக்கி பல திசைகளிலும் தாக்குதல் நடைபெற்றது

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமான இத்தாக்குதல் சுமார் ஒன்றரை மணிவரை நீடித்தது பீரங்கிக் கப்பல்களை நோக்கி தமிழீழ விடுதலைப்புலிகள் கரையிலிருந்து ஷெல், ஆர் பி. ஜி தாக்குதல்களை மேற்கொண்டபோது கப்பல்களுக்கு மிக அருகில் விழுந்ததால் பீரங்கிக்கப்பல்கள் நின்ற இடத்திலிருந்து பின்நோக்கிச்சென்று தூரத்தில் நிலைகொண்டன.

அங்கிருந்து சரமாரியான பீரங்கித் தாக்குதலையும் மோட்டார் ஆட்டிலறி ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டன கம்பர்மலை கெருடாவில் பகுதிகளில் விழுந்து வெடித்துச்சிதறிய பீரங்கி ஷெல்களினால் பலர் காயமடைந்தும் பலவீடுகளும் சேதமடைந்துமுள்ளன

இப்படியான தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் துணையாக ஹெலிக்கொப்டரும் வானத்தில்

[8ம் பக்கம் பார்க்க]

## நாலு பேர் கொலை 200 பேர் கைது

கொழும்பு, வெள்ளி மட்டக்களப்பில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை ஒன்

(5ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிப்பிரயோகம் ஆசிரியர், பெண் படுகாயம்

[நமது இராமநாதபுரம் நிருபர்]

சிரமதான மூலம் பாதை ஒன்றை சீர்படுத்துவதற்குச் சென்ற பொதுமக்கள் மீது பற்றைக்குள் பதுங்கியிருந்த ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு ஆசிரியர், ஒருபெண் உட்பட பலர் படுகாயமுற்றனர்.

நேற்றுக்காலை, கிளிநொச்சி இரத்தினபுரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:

"இரத்தினபுரத்தில் இருந்து டிப்போ சந்திக்குச் செல்லும் பாதை தண்ணீர் பாய்ந்து போக்குவரத்திற்குத் தடை

(5-ம் பக்கம் பார்க்க)

## ★ மக்கள் முன்னிலையில் இராணுவ ஒற்றனுக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், சனி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களைக் கொலை செய்வதற்கு இராணுவத்தினரின் ஒற்றராக இருந்த அரியாலையைச் சேர்ந்த செல்வபாலன் என்பவருக்கு நேற்றுக்காலை ஏராளமான பொதுமக்கள் முன்னிலையில் வைத்து மரணதண்டனை வழங்கப்பட்டது.

அரியாலை தபால் சட்டைச் சந்தியில் உள்ள மின்கம்பம் ஒன்றில் நேற்று 11 மணியளவில் செல்வபாலன் கட்டி வைக்கப்பட்டார் ஏராளமான பொதுமக்கள் அவரைப்

(8ம் பக்கம் பார்க்க)

## பல். மாணவன் கடத்தல்; ஈ.பி. ஆர்.எல்.எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், சனி யாழ். பல்கலைக்கழக மாணவன் அ விஜிதரன் கடத்தப்பட்டதுக்கும் தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்றும் இதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக ஈ பி ஆர். எல். எவ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவ்விடயம் சம்பந்தமாக மாணவர்கள் நடத்தும்போராட்டத்திற்கு ஆதரவை வழங்குகிறோம் ஏனைய பிரதேசங்களிலிருந்து யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்க வரும் மாணவர்களுக்கு யாழ் மக்களும் விடுதலை ஸ்தாபனங்களும் பாது

[8ம் பக்கம் பார்க்க]

## இப்பொழுது பயணம் பின்னர் கட்டணம்

உங்களது சகல விமானப்பயணத் தேவைகளுக்கும், எல்லா விமானப்போக்குவரத்துக் களுடன் இணைப்புக்கொண்ட

## ஹோம் பினன்ஸ்

நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்!

★ எம்மிடம் நிரந்தர வைப்புப்பணம் உள்ளவர்களுக்கு உடனடியாகவும் மற்றவர்களுக்கு வசதிக்கேற்ற தகுந்த உத்தரவாதமிருப்பின் 18 அல்லது 24 மாதத் தவணைகளில் உங்கள் பிரயாணத்தொகையை செலுத்தக்கூடிய வகையில் கடன் உதவியை இப்பொழுது நாம் வழங்குகிறோம்:

விபரங்களுக்கு:

## HOME FINANCE LTD.

கிளை முகாமையாளர்:
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது தலைமைக்காரியாலயம்
463, காலி வீதி, கொழும்பு - 3.

[C 2808]

## விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில் கூறுங்கள்: பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம் சனி யாழ். பல்கலைக்கழக 3ம் வருட மாணவன் அ விஜிதரன் காணமல்போனது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் இராமநாதன் வீதி, காங்கேசன்துறை வீதி கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, ஊடாகச் சென்று மீண்டும் பல்கலைக்கழகத்தை அடைந்தது.

ஊர்வலத்தின்போது 'விஜிதரன் எங்கே' இயக்கங்களே பதில்கூறுங்கள்' மாணவர் கடத்தல் வேண்டாம்' மாணவர்களுக்குப் பாதுகாப்பை வழங்குங்கள்', மாணவர்களின் உரிமைகளைப் பறிக்காதே' போன்ற கோஷங்களை மாணவர்கள் எழுப்பினர்.

ஊர்வலம் முடிவடைந்தும் மாணவர்கள், உபவேந்தரைச் சந்தித்து தங்கள் கோரிக்

(5ம் பக்கம் பார்க்க)

## 'வித்தி' வேண்டுகோள்



யாழ்ப்பாணம், சனி "மட்டக்களப்பிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்குக் கல்விகற்கவந்த வர்த்தக பீட மூன்றாம் ஆண்டு மாணவன் அ விஜிதரன். அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து திடீரெனக் காணமல்போனதையடுத்துப் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருவதால் விரிவுரைகள் நடத்தமுடியவில்லை',

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வர்த்தகபீட மூன்றாம்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கல்வி

மீண்டும் கிடைக்கும் "கணக்காய்வு" (Auditing). ஆக்கியோன்: க. ஜெயரட்ணம், M Com. ரூபா 30/- -A/L 9வருட தமிழ், இந்து நாகரிகம் வெளிவந்துவிட்டன, ஒவ்வொன்றும் ரூபா 45/-, புத்தக வியாபாரியை நாடுக. C 5638

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும் விலைக்கும் வாங்கப்படும். Fudo Enterprises, 39/17, Power House Road, (3rd Lane), Jaffna.
C 5621

கைரேகை, எண்சோதிடம் கிரகநிலை விபரமாகப்பார்த்து உண்மைநிலை சொல்லப்படும். இத்துடன் மணமகள், மணமகன் தேவையானவர்களும் உடன்தொடர்புகொள்ளலாம் செவ்வாய் குற்றமுள்ள சாதகர்களுக்கு முதலிடம் உண்டு. செ. நாகேந்திரராசா, 174/16, கோவில்வீதி. (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்நகர்.
(C-5499)

எமது ஸ்தாபனத்தில் தும்பு விநியோகம் 15ம் திகதிமுதல் நடைமுறைக்கு வரவுள்ளது. 1000 கிலோவிற்கு மேலதிகமாக ஒரு முறையில் பெற விரும்புபவர்கள் உடன்தங்கள் ஸ்தாபனத்தை பதிவு செய்யவும். விலை 8500/-, மெத்தைத் தும்பு 2500/-, தும்புத்தடித் தும்பு 10000/-. தேசியதும்புத் தொழிற்சாலை, 40, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
C 5611

சுன்னாகம்
மின்சார நிலையம்.

### கேள்விகள்

**பாவித்த, பாவித்துக் கழித்த பொருட்களின் விற்பனைக்கு**

சுன்னாகம் மின்சார நிலையத்தில் பாவித்த, பாவித்துக் கழித்த பொருட்களின் விற்பனைக்காகக் கேள்விகள்கோரப் படுகின்றன.

பொருட்களின் அட்டவணையைப் பெறவிரும்புவோர், ரூபா 50/-க்கு பொதுமுகாமையாளர், இலங்கைமின்சார சபை (General Manager-C. E B.) என்ற பெயரில் பெற்ற மணியோடரைச் செலுத்தி, சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இப்பணம்திருப்பித்தரப்படமாட்டாது.

பாவித்தபொருட்களுக்கான விலைகள் அடங்கிய கேள்விகளை மின் பொறியியலாளர், சுன்னாகம் மின்சார நிலையம் என விலாசமிட்டு, ஒட்டிய உறைகளின் மேல், இடது புறத்தே "கேள்விகள்-பாவித்த பொருட்களுக்கு" எனக்குறிப்பிட்டு, 24-11-86க்குப் பிந்தாமல் அனுப்பிவைக்க வேண்டும்.

பொருட்களைப் பார்வையிட விரும்புவோர், முன் அறிவித்தல் தந்தால், பார்வையிட ஒழுங்குகள் செய்யப்படும்.

**செ. சிவன்நேசன்,**
மின்பொறியியலாளர்,
சுன்னாகம் மின்சார நிலையம்,
[A-3071]

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி (Broilers) விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்.
(C 5637)

சகல வேலைகளும் செய்யக் கூடிய மரவேலை இயந்திரம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: N குணதாசன், சிவன் வீதி, ஆவரங்கால்.
(C 5640)

நல்ல நிலையிலுள்ள நஷனல் T V. 20", டெக் N V 300 ஜெனறேற்றர் ஜமகா தொடர்புகள்: ஷதீஸ் றெக்கோடிங் ஸ்ருடியோ, 189, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம் (C 5632)

யமஹா ஸ்டீரியோ செற் 600 Watts 1986 மொடல் புதியது. விற்பனைக்குண்டு விபரங்கட்கு: 32, சீனிவாசகம் வீதி, கொட்டடி. (C 5631)

சுத்தமாக தயாரிக்கப்பட்ட குரக்கன்மா மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M.G.M 777 K K S Road and 208, 1st Cross St, Jaffna. T. P. 22611.
(C 5071)

யாழ்: கந்தர்மடம் மணத்தறை ஒழுங்கையில் கிணற்றுடன் கூடிய 2¼ பரப்பு வீடு கட்டக்கூடிய சதுரமானகாணி விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மேல் தொடர்புகொள்ளவும். B R. ரஞ்சன். 18, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(C 5568)

வீட்டுத்தளபாடங்கள், அல்மாரி கட்டில் மெத்தைகள், கசற்றேடியோக்கள், 4 Burner Electric Cooker, பெரிய Kenwood குளிர்சாதனபெட்டி, பியானோ எக்கோடியன், மின்சார தேநீர் Boiler மின்விசிறிகள், கிளாஸ் பீங்கான் வகைகள், வீட்டு Showcase, கண்ணாடி மேசைகள், சாப்பாட்டு மேசைகள், எழுது மேசைகள், வெளிநாட்டு T. V. Stand மெலோடிக்கா, சில்வர் பொருட்கள் மற்றும்பலஉடன் விற்பனைக்கு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C 5644)

நவீல்ட் செவிப்புலன்
விழிப்புலன் இழந்தோர்
பாடசாலை, கைதடி

### பாடசாலைப் பிரவேசம் - 1987

**செவிப்புலன் இழந்த பிள்ளைகளுக்கு**

சில வெற்றிடங்கள் உள்ளன 5 அல்லது 6 வயதுப் பிள்ளைகள் மட்டுமே சேர்க்கப்படுவர். வயது கூடியபிள்ளைகள், வெற்றிடமிருப்பின் விசேட சலுகையாக சேர்த்துக் கொள்ளப்படலாம்.

**விழிப்புலன் இழந்த பிள்ளைகளும், பார்வை அதிகம் குறைந்த பிள்ளைகளும்**
(5 வயதுமுதல் 10 வயதுவரை) சேர்த்துக் கொள்ளப்படுவர். கூடியவயதுடையோர் விசேட சலுகையாக சேர்த்துக்கொள்ளப்படலாம்.

விசேட கல்வி, விடுதி வசதிகள் இலவசம். அனுமதிகோர விரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட நீள் கவர் அனுப்பிஅனுமதிப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிரப்பப்பட்ட படிவங்கள் நவம்பர் 30ம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல்வேண்டும்.

அதிபர்
நவீல்ட் பாடசாலை,
கைதடி.

A 3074

## தேவை

ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவமும், நம்பிக்கையும், திறமையும் வாய்ந்த 25-35 வயதிற்குட்பட்ட ஆண் விற்பனையாளர் (Salesman) உடன்தேவை விளம்பர இல: C 5639 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். C 5639

சங்கீத வேலைகள் கவனிப்பதற்கு லிகிதர் இருவர் தேவை. பத்திரிகைத்துறையில் அனுபவமும், ஆங்கிலம், தமிழ், தட்டெழுத்து தெரிந்தவராகவும், ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவம்உடையவராகவும் இருத்தல் வேண்டும். நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை. செயலாளர், சிவகுமார் ஸ்ரோர்ஸ், 282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C 5627)

## வகுப்புகள்

A/L 87 துரிதமீட்டல்வகுப்புகள் பல வருட அனுபவமிக்க பிரபல விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் இணைந்து நடாத்துகின்றனர் தாவரவியல் திரு சிவ வீரசிங்கம், விலங்கியல் திரு தம்பிராஜா, தூய பிரயோக கணிதம் திரு. பிரேம்நாத் பௌதிகம் திரு. ரவீந்திரநாதன் இவ்வகுப்புக்கள் 11 - 11 - 86 செவ்வாய் கிழமை 2. 30 p m ஆரம்பமாகவுள்ள பிரபல்ய துரித மீட்டல் இரசாயன வகுப்புகளுடன் இணைந்து ஆரம்பமாகவுள்ளன. 3ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (P. M. C. முன்பாக).
(C 5605)

## வாடகைக்கு

மாவீரன்: தழுவாத கரங்கள், வாழ்க்கைப் போராட்டம், தென்றலைத் தொடாத மலர் இன்னும் பல. T S. நாகம்ஸ், கட்டிடம், சுன்னாகம். (C 5625)

### ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி மகேந்திரன் விஜயலக்சுமி**

தோற்றம்: 15-01-1949
மறைவு: 20-10-1985
திதி: 8-11-1986

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய் பொறுமைக்கு இலக்கணமாய் எம்மை வழிநடத்தி வந்தகுளவிளக்கே இடைநடுவில் எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்தனையோ! தெய்வமே நீ கட்டிய கோட்டை எல்லாம் கனவாய்ச் சரிந்தாலும் உன் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது. உனது ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கிறோம். உனது பாதக் கமலங்களை கரங்கூப்பி வணங்கும்: கணவன், பிள்ளைகள், சகோதரர், மைத்துனர், மைத்துனிகள்.
60, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். C 5651

---

**வியாபாரிகளே!**

"சங்குமார்க்" எவர்சில்வர்ப் பாத்திரங்களை மொத்தமாக மிகவும் கூடிய விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள ஒரே ஒரு ஸ்தாபனம்

### செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்,

இல. 118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
(A 2350)

---

### North Ceylon Master Bakers Association
### வடமாகாண பேக்கரி உரிமையாளர் சங்கம்

மேற்படி சங்கம் புனரமைக்கப்பட இருப்பதால் சங்கத்திலுள்ள பழைய அங்கத்தவர்களும் புதிதாக சேர விரும்பும் உரிமையாளர்களும் தவருது 9-11-86 அன்று காலை 9-30 மணியளவில் யாழ். பிரதான வீதியிலுள்ள பிறிமியர் பேக்கறியில் சமூகம் அளிக்கவும். (C 5600)

---

### BECON
**Day Class**
**பிரிவு II 87 A/L**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| அளவையியல் | — | திரு S. S மகேஸ்வரன் |
| வர்த்தகம் | — | திரு ரட்ணம் |
| கணக்கியல் | — | திரு மரியதாஸ் ராஜன் |
| இந்து நாகரீகம் | — | திருமதி அருள்நங்கை |
| தமிழ் | — | திரு. நாகேஸ்வரன் |
| புவியியல் | — | திரு. சண் |

ஆரம்பம்: 12 - 11 - 86 (புதன் 7-00 மணி)
(A-2853)

---

### பிரயாண ஒழுங்குகள்

★ இங்கிலாந்து (U. K)
★ டென்மார்க்
பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.
★ ஓமான் ★ அபுதாபி
அரச நிறுவனங்களில் வேலையாட்கள்.
★ சவூதி கிளீனேஸ், கெல்பேஸ், எலக்ரிசன், கோட்டல் வேலையாட்கள்.
விரைவான பயண ஒழுங்கு செய்யப்படும்.
★ பாஸ்போட் ★ பொண்ட் ★ டிக்கற்

விபரங்களுக்கு:-
**R. K. பரமசுவாமி (பவானி),**
ஆஸ்பத்திரி ஒழுங்கை, இணுவில்.
(C-5645)

---

### சென் பீற்றர்ஸ் பாலர் பயிற்சி வகுப்புகள்

1987-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் 2-ம் குறுக்குத் தெருவில் இருக்கும் கிறிஸ்து ஆலயத்திலும் இதன் கிளை காங்கேசன் வீதியில் இருக்கும் கில்னர் மண்டபத்திலும் ஆரம்பமாகும்.

1. பாலர் வகுப்புகள் 31-01-84க்குப் பின் பிறந்தவர்கள்.
2. ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி ஆண், பெண் பிள்ளைகளுக்கு 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை.
3. பெண்களுக்குப் பாலர் பாடசாலை ஒரு வருட ஆசிரியப் பயிற்சி, ஆங்கிலத்திலும் தமிழிலும் நடைபெறும்.

விண்ணப்பங்கள் பாலர் வகுப்புக்கு டிசம்பர் 15-ம் திகதிக்குமுன் விரும்பிய பாடசாலையைக் குறித்து அனுப்பவும். மற்ற விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பி 1987-ம் ஆண்டு தை மாதம் 5-ம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**திருமதி எஸ். தர்மரெட்ணம்,**
31, 2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(C 5647)

## ★ ஜம்மு - காஷ்மீரில்———

# டாக்டர் பருக்அப்துல்லா தலைமையில்புதியகூட்டரசு

ஸ்ரீநகர், நவ - 7

**இந்தியாவின் வடமாநிலமான ஜம்மு-காஷ்மீரில் டாக்டர் பருக் அப்துல்லா தலைமையில் புதிய மாநில அரசு உருவாக்கப்பட்டுள்ளது இந்திரா காங்கிரஸ், மற்றும் காஷ்மீரின் தேசிய மகாநாட்டுக்கட்சி ஆகியன கூட்டாக இப்புதிய அரசை உருவாக்கியுள்ளன.**

28 மாதகாலத்தின் பின்னர் ஜம்மு-காஷ்மீரில் இப்புதிய அரசு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. 1984 ம் ஆண்டு ஜூலை மாதம்முதல் புதுடில்லி மத்திய அரசின் நேரடி ஆட்சியின்கீழ் ஜம்மு-காஷ்மீர் இருந்து வந்தது.

தேசிய மகாநாட்டுக் கட்சியே ஜம்மு-காஷ்மீரில் ஆட்சிசெலுத்தி வந்தது. ஆயினும் 1984 ஜூலையில் இக் கட்சியிலிருந்தும் 13 மாநிலசபை அங்கத்தவர்கள் விலகியதையடுத்து, டாக்டர் பரூக் அப்துல்லா தலைமையிலான தேசிய மகாநாட்டுக்கட்சி அரசு, அதன் ஆட்சி அதிகாரத்தை இழந்தது.

தொடர்ந்து டாக்டர் பரூக் அப்துல்லாவின் மைத்துனரான குலாம் மொஹமட்ஷா தலைமையில் புதிய ஜம்மு-காஷ்மீர் அரசு இந்திய மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அமைக்கப்பட்டது.

தற்போதைய புதிய மாநில அரசாங்கம் இந்திரா காங்கிரஸ், தேசிய மகாநாட்டுக் கட்சி ஆகியவற்றின் கூட்டிணைப்பின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

77 உறுப்பினர்கள் கொண்ட ஜம்மு-காஷ்மீர் மாநிலசபையில் 33 பேர் தேசிய மகாநாட்டுக்கட்சி உறுப்பினர்களாவர் 25 பேர் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஆவர்.

டாக்டர் பரூக் அப்துல்லா இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் நள்ளிரவுக்குப் பின்னர் ஜம்மு-காஷ்மீர் ஆளுநர் திரு. ஜெகன்மோகன் முன்னிலையில் புதிய முதலமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்டார்.

பதவியேற்பையடுத்து உரை நிகழ்த்திய போது 'ஜம்மு-காஷ்மீரின் வளர்ச்சி, இந்தியாவின் தேசியநலனைப் பேண எனது புதிய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றார்''

## தென்றற்காட்டில்———

# மூளைக்காய்ச்சல் 30 பேர் மரணம்!

சென்னை, நவ 7

தமிழகம் தென்றற்காடு மாவட்டத்தில் 30 பேர் மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர். மேலும் 100 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நோய்க்குள்ளானவர்களில் அநேகர் 7 வயதுக்கும் 25 வயதுக்குமிடைப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்றற்காட்டில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியுள்ள பகுதிகளில் 3 கிலோமீட்டர் சுற்றளவிற்கு நுளம்பு ஒழிப்பு மருந்து தெளிக்கப்பட்டதுடன் அப்பகுதிகளிலுள்ள கட்டாக்காலி பன்றிகளும் கொல்லப்பட்டு வருகின்றன.

# "போஷாக்கு உணவுகுறித்து தாய்மார் அறிந்திருத்தல் அவசியம்''

சாவகச்சேரி, வெள்ளி

''தமிழ் சமுதாயம் இன்று போர்க்காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது எம் சிறுர்களுக்கு உள, உடல் ரீதியிலான தாக்கங்கள் ஏற்படாதவாறு அவர்களுக்கு நல்ல போஷாக்கு உணவினை ஊட்டத் தாய்மார்கள் அறிந்து கொள்ளல் மிகவும் அவசியமானதாகும்.'' என்று கைதடி சித்த வைத்திய பீடத் தலைவர். டாக்டர் எஸ். பவானி சித்த வைத்திய பீட மண்டபத்தில் அறவழிப் போராட்டக்குழுவினால் நடாத்தப்பட்ட போஷாக்கு தினக்கூட்டத்தில் கருத்துரை வழங்கும்போது தெரிவித்தார்.

குழுவின் கல்வி இயக்குநர் திரு. வீ எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அறவழிப் பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேலான பாலர்களும் அவர்களின் தாய்மாரும் பங்கு கொண்டிருந்தனர்.

இக் கூட்டத்தில் சித்த வைத்திய பீட மாணவர் திரு. ரீ. சிவசண்முகராசா அங்கு பேசும்போது ''எங்கள் பகுதிகளில் இருக்கின்ற போஷாக்கு வளங்களைப்பாவித்து எம் பாலர்களுக்குப் போஷாக்கு உணவினை வழங்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். நாளைய சமுதாயத்தில் தலைமைப்பதவியை ஏற்கப்போகும் எம் சிறுர்கள் ஆரோக்கியமானவர்களாகத் திகழ வேண்டும். ஆரோக்கியமான தாய்மார்களால்தான் ஆரோக்கியமான சிறுர்களைப்பெற முடியும்'' என்றார்.

யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் இக் கூட்டத்தில் உரையாற்றும்போது, ''போஷாக்கு பற்றிய அறிவு மக்கள் மத்தியில் மிகவும் குறைவாக இருப்பதன் காரணமாக நாம் எம் மண்ணிலே இருக்கின்றபோஷாக்கு உணவுகளைப் பாவித்து வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பால்மா உணவினைத் தவிர்த்துக் கொள்வது நல்லது'' என்று கூறினர்.

சாவகச்சேரி வைத்தியர் சங்கத்தின் பொதுச்செயலாளர். டாக்டர். எஸ். சிங்கராசா, டாக்டர். எஸ். சபாநாதன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

இறுதியில், கூட்டத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் போஷாக்குக்கஞ்சி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

## பிரிட்டனில் 'ஹெலி' விபத்து:

# 45 எண்ணெய் அகழ்வு தொழிலாளர் பலி!

லண்டன், நவ 7

பிரிட்டனில் 45 பேர் ஹெலிகாப்டர் விபத்தொன்றில் கொல்லப்பட்டனர். உலகில் இடம்பெற்ற மிக மோசமான ஹெலிகாப்டர் விபத்து இது வெனத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்கொட்லாந்துக்கு வடக்கே ஷெரண்ட் தீவுப்பகுதியில் வடகடலிலேயே இந்த விபத்து நேற்று இடம்பெற்றது.

வடகடல் எண்ணெய் அகழ்வு மேடைகளிலிருந்து தொழிலாளர்களை ஏற்றிவந்த ஹெலிகாப்டர் ஒன்றே விபத்துக்குள்ளானது.

'சி-நூக்' என்ற ரகத்தைச் சேர்ந்த இரட்டைக் காற்றாடிகளைக்கொண்ட இந்த அமெரிக்கத் தயாரிப்பு ஹெலிகாப்டர் 500 அடி உயரத்திலிருந்து கடலுக்குள் வீழ்ந்ததாக விபத்தை நேரில்பார்த்த ஹெலி விமானி ஒருவர் தெரிவித்தார்

இந்த ராட்சத ஹெலிகாப்டர் சுமார் 50 பயணிகளை ஏற்றிச்செல்லக் கூடியதென்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல்களும், வேறு மீட்புப் பணி ஹெலிகாப்டர்களும் செயலில் இறங்கியுள்ளன

இருவர் மட்டுமே உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளனா 19 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

இவ்விபத்தையடுத்து வடகடலில் இருந்து ஏனைய எண்ணெய் அகழ்வுத் தொழிலாளர்களை ஏற்றிவரவிருந்த 'சி-நூக்' ஹெலிகாப்டர்கள் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவ் விபத்துக்குறித்து பிரிட்டிஷ் அரசு புலன்விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

உலகச் செய்திகள்

## 87 மார்ச்சில்———

# ஸ்ரீரங்கம் கோபுரம் குடமுழுக்கு

சென்னை, நவ. 7

திருச்சி 'ஸ்ரீரங்கம்' ஆலயத்தின் புதிய கோபுர குடமுழுக்கு வைபவம் அடுத்த ஆண்டு மார்ச் 25ம் திகதி இடம்பெறுமெனத்தெரிவிக்கப் பட்டுள்ளது

பதின்மூன்று அடுக்குகளைக் கொண்ட இப்புதிய கோபுரம் காணப்படுகின்றது. இக்கோபுரமே இந்தியாவில் உயரம் கூடிய இந்து ஆலயக் கோபுரம் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 4வருடங்களாகஇந்த ஆலய கோபுரம் கட்டப்பட்டு வந்தது. இதற்கென ஒன்றரைக்கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்தியாவின் பிரபல கலைஞர்கள், தொழிலதிபர்கள், மற்றும் பிரமுகர்கள் இக்கோபுரத் திருப்பணிக்கு நிதியுதவி அளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவ தலைவர் 'விபுல்' மரணம்:

# வானொலி செய்தி குறித்துக் கண்டனம்!

யாழ்ப்பாணம், சனி

''யாழ் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் தலைவன் விபுலானந்தன் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான செய்தியை கடந்த 3ம் திகதி இலங்கை வானொலி உண்மைக்கு மாருகப் போராளிகளிடையே ஏற்பட்ட மோதலில் அவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாக ஒலிபரப்பியது. எனவே இவ் வானொலிச் செய்தி குறித்து எமது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.''

இவ்வாறு யாழ் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

மேலும் கல்லூரியின் எதிர்கால நிலைபற்றி ஆராய ஆலோசனைக் கூட்டமொன்று இன்று சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திச் சபையால் கூட்டப்படவுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் கூடிய மாணவர் அவையின் பொதுச் சபையும் இச் செய்திகுறித்துக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இக்கண்டனத் தீர்மானத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சர் வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-ஓ)

HOTEL GNANAMS

Relax at the Beer Garden on Sat.

at 6-00 p.m. — 11-00 p.m



Beer with Spanish Omelette Rs 30/-.
Enjoy the best Chinese meals.
Hot and Cool drinks
Lunch and Short-eats.
Open 9-30 a. m. — 11-30 p. m.
299, Clock Tower Road, Jaffna.
T/phone: 22082 23067

[A-2849]

திறமையான அசோக் லேலண்ட் உதிரிப்பாகங் கள் உபயோகிப்பதினல் உங்கள் லங்கா அசோக்லேலண்ட் வாகனம் மிக நன்ருக ஓடுகின்றது.

விலை ரூ. 25/- முதல்

லங்கா அசோக் லேலண்ட சர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்
60, பார்க் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 541003
தொழிற்சாலை: பனுகொடை, ஹோமாகம. தொலைபேசி: 550592

### மணிவாக்கு

''கிழமைப்பட வாழ்''

— ஒளவையார்

(கிழமைப்பட உன்னிடத்தில் உள்ளபொருள் பிறர்க்கும் உரிமைப்பட)

## நமது நோக்கு

# 12-ம் தேதி 10-ம் பட்ஜட்

பலமுறை வங்குரோட்டைத் தழுவி நின்ற பிரபல வர்த்தகர் ஒருவர் இறந்த போது, அவர் எழுதிவைத்த குறிப்பொன்று பாதுகாப்பான பெட்டிக்குள் காணப்பட்டது

''பின்வரும் ஆறு வங்கித் தலைவர்கள் என்னுடைய பூதஉடம்பைச் சுமந்து செல்லவேண்டும். வாழும் காலத்தில் என்னைத் தாங்கிக்கொண்ட அறுவரே இதனை இன்று பூர்த்திசெய்வது பொருத்தமானது''

வருகிறவாரம் வெளியாகவிருக்கும் வரவு-செலவுத் திட்டம் தொடர்ந்து நாட்டை வங்குரோட்டுக்கு இட்டுச் சென்றபோதும் அடக்கம் செய்யும் ஆபத்து எதுவுமில்லை. வங்கி முதல்வர்கள் காப்பாற்றுவாரென்ற நம்பிக்கை பத்து பட்ஜட்டுகளைச் சமர்ப்பிக்கும் பாக்கியம்பெற்ற நிதியமைச்சருக்கு உண்டு.

வருவாய் 4180 கோடி; செலவு 7200 கோடி, பற்றுக்குறை 3020 கோடி! அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதுமில்லை என்ற பாடலுக்கமைய நிதியமைச்சர் பற்றுக்குறையை எவ்வாறு ஈடுசெய்யலாமென்ற இரகசியத்தை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தத்தக்க ஆயத்தம் செய்கின்றார்.

ஆன முதலில் அதிகம் செலவாகி மானமிழந்து மதிகெட்ட நிலையில் நிதியமைச்சர் இந்தப் பெரும் பொறுப்பை பத்து வருடங்களுக்குமுன் ஏற்றார்.

அன்று வறண்டுகிடந்த திறைசேரி இன்றுவரைக்கும் தொடர்ந்து தொழிற்படுவதானால் அது நிதியமைச்சரின் பேராற்றலை நிரூபிக்கிறது

இன்றைய கடன் பளு ஆயிரத்து அறுநூற்றிருபது கோடி! கோடி என்றால் இன்று எவரும் ஏங்குவதில்லை. தினசரிவாழ்விற்கு ஆயிரக்கணக்கில் செலவிடும் பேர்கள் இந்த நாட்டில் எத்தனை பேர்! நூறு ரூபா கையிலில்லாமல் கடைத்தெருவிற்குப் போகலாமா?

துண்டுவிழும் தொகை கூடிக்கொண்டு போவதே ஒழிய குறைவதற்குரிய அறிகுறிகள் எவையும் இல்லை.

பிரம்மாண்டமான அபிவிருத்தித்திட்டங்கள் முடிவடைந்த நிலையிலும் அவற்றால் ஏற்படும் நன்மைகள் எட்டத்திலேயும் காணப்படவில்லை. மீண்டும் கடனுதவிகொண்டே விரிவடையும் இப்பெரு வெளியை நிரப்ப வேண்டியிருக்கிறது.

ஆண்டவன் இந்தநாடு தேயிலை, ரப்பர், ஒரளவிற்கு தென்னை கொண்டே சம்பாத்தியம் செய்ய முடியுமென்றவகையில் இயற்கை வளத்தை படைத்திருப்பது கண்கூடு. ஆனால் புத்தபெருமான் போதித்ததுபோல் தேயிலை வருமானம் கணத்திற்கு கணம் மாற்றமடைகிறது

தேயிலையின் விலை இன்று ஐந்நூறு கோடி ரூபா பெருவீழ்ச்சிகண்டிருக்கிறது. றப்பருக்கும் இருந்த மதிப்பு அருகி வருகிறது; தேங்காய் விலை வீழ்ச்சி இல்லத்தரசிக்கு இன்பமானாலும் நாட்டுக்கு 30 கோடி ரூபா நட்டம், கப்பல்துறை, எயர் லங்கா, இ. போ. ச. பற்றிப் பேசத்தேவையில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக முதலில்லா வியாபாரம் என்று கருதப்படும் உல்லாசத்துறை எதிர்பார்ப்பு அனைத்தையும் நாசமாக்கி விட்டது

உல்லாசப்பயணிகள் எவரும் இந்த நாட்டில் நடப்பதை அறியாதவர்களா? யுத்தம் தொடரும் நாட்டில் உல்லாசப் பயணிகள் பாதுகாப்பாக உலாவுவது எங்ஙனம்?

தேயிலை தரமாயிருந்தாலும் அதனை விற்பனை செய்வதற்குண்டான பிரசாரம் யுத்தம் உட்பட பல்வேறு காரணங்களால் தோல்வி கண்டிருக்கிறது.

கடன்பிரிக்கும் ஆற்றல் நிதியமைச்சருக்கு அதிகம் உண்டென்பதில் ஆட்சேபமில்லை.

ஆனால் பெண்ணின் அழகு பெரிதானாலும் கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு என்றுபோல சர்வதேச நிதிச் சங்கங்கள்கடன் கொடுப்பதில் கடைப்பிடிக்கும் உபாயம் இது:

ஐம்பது கோடி ரூபாய் பாக்கியை அறவிட முடியாத இலங்கை மின்சார சபைக்கு ''இதனை அறவிடு அல்லது கடனில்லை'' என்கிறது உலகவங்கி இதற்குமேலாக எத்தனை தொழில்கள் கூட்டுத்தாபனங்கள் பெருநட்டத்தில் ஓடுகின்றன.

''நிர்வாகச் சீர்கேடே காரணம் ஊழல்கள் அல்ல. ஊழல்கள் இருந்தால் அவற்றை அம்பலப்படுத்தும் பொறுப்பு மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும்உண்டு'' என்கிறார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

நல்ல சமாசாரம்! பத்திரிகைகளோ பொதுமக்களோ இத்தகைய பொறியில் இலகுவில் மாட்டிக் கொள்ளமாட்டாரென்பது தெளிவு; நிர்வாகச் சீர்கேடு என்பது ஊழல் மோசடியென்பவற்றை உள்ளடக்கிய மங்கல அணியென்பதை யாரறியார்?

உள்நாட்டு யுத்தம் ஒன்று முடிவடையாது தொடரும்போது கண்ணை மூடிக் கொண்டுள வரும் கடன் கொடுப்பார்களா? ஆயிரத்தெழுபது கோடிரூபா இவ் வருடத்தில் பாதுகாப்புக்கு ஒதுக்க வேண்டியிருக்கிறது.

பாவம் றொனி! 'இந்தா போர் முடிவடைகிறது, சமாதானவாழ்வுக்கே இக் கடனுதவி பயன்படுத்தப்படும் என்றுவருடா வருடம் சொல்லிவந்தார் வருகிற வார பாராளுமன்றத்தில் என்ன சொல்லப்போகிறார்?

''போரொழிந்தால் நாடு நிமிர்ந்துவிடும் சமாதானத்துக்கு சாத்தியம் உண்டானால் துண்டுவிழும் தொகைஎன்செயும்'' என்ற பல்லவி பாடப்படும்.

டாக்கா, திம்பு, டில்லி கொழும்பு போன்ற பெருந்தலைநகரங்கள் தோல்வி கண்டன; இனிவரும் பங்களூர் சந்திப்பில் அற்புதம் நடக்கும். நடக்க வேண்டியிருக்கிறது. நடக்குமா?

முயலோடு ஓட முயல்வதுடன் வேட்டை நாயுடன் வேட்டையாட விரும்புவதே இன்றைய அரசின் போக்கு. இதனை இந்தியா இலங்கைக்கு உறைப்பாக உணரவைக்க முடியுமானால் இலங்கை அரசு தன் கண்மூடித்தனத்தை கைவிடமுடியும்.

## இன்று பிறந்த நாள்: ஜீ. ஜீ. யின் சொல் வன்மையும் ஆளுமையும்

— சோமசுந்தரம் வன்னியசிங்கம் —

1901ம் ஆண்டு பதினோராம் மாதம் 8ம் திகதி ஈழமண்ணில் பிறந்து 9-2-1977ல் கோலாலம்பூரில் தனது இறுதி மூச்சைவிட்ட அரசியல்வாதி பொன்னம்பலத்தின் சேவையையோ தமிழரின் முன்னேற்றிற்கு அவர் வழங்கிய பங்களிப்பையோ காலப்போக்கில்தான் தெளிவாகக் கணிப்பீடு செய்ய முடியும்

எந்த ஒரு அரசியல்வாதி மீதும் சமகாலத்தில் நிலவும் பற்றுக்கள், பாசங்கள், வெறுப்புகள், எதிர்ப்புகள் மட்டுமன்றி கையாளப்படும் குறிக்கோள்கள், கொள்கைகள், இலட்சியங்கள், தத்துவங்கள் ஆகியவற்றின் தகைமையையோ தாக்கத்தையோ சமகாலத்தில் எடைபோடுவது நிலவும் குளறுபடிகளால் பாதிக்கப்படும்.

அரசியல் அரங்கில் பொன்னம்பலம் கைக்கொண்ட நிலைகள், எடுத்த நடவடிக்கைகள், கையாண்ட உபாயங்கள் அவரின் செயற்திறன் ஆகியவைகளுக் கிடைத்த ஆதரவும் எதிர்ப்பும் மேலே கூறிய சக்திகளால் பெருமளவு பாதிக்கப்பெற்றது. பொன்னம்பலத்தின் அளப்பரிய சொல்வளம் அவரின் அரசியல் சித்திக்குப் பாதகமாகவே இருந்தது என்று கூறுவது திகைப்பூட்டும் உண்மையென்றே கொள்ள வேண்டும். ஒரு நிகழ்ச்சியைச் சான்றாக எடுத்துக் காட்டுவோம்.

டொனமூர் அரசமைப்பு ஆணைக்குழுவின் அறிக்கை (தமிழினத்திற்குப் பாதகமான அறிக்கை) 1928ம் ஆண்டு யூலை மாதத்தில் வெளியிடப்பட்டது. அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் 26ம் திகதிகளில் கொழும்பு பிளாசா சினிமா மண்டபத்தில் இலங்கை தமிழர் சங்க (CONFERENCE)த்தின் பொதுக்கூட்டம் டொனமூர் சிபார்சுகளை ஆராய்ந்தது நிர்வாகக் குழுவினர் சமர்ப்பித்த நகல் தீர்மானத்திற்கு பொன்னம்பலம் ஒரு திருத்தப் பிரேரணையைக் கொண்டுவந்தார் இத்திருத்தம் உத்தியோகபூர்வமாகக் கொண்டுவரப் பெற்ற உப்புச்சப்பற்றதும் தோல்வி மனப்பான்மையைப் பிரதிபலிக்கும் தீர்மானத்தின் அர்த்தத்தையும் போக்கையும் முற்றாகத் திசைதிருப்பும்வகையில் அமைந்தது அவர் உரையாற்றுகையில்கூட்டம் தமிழர் சங்கத்தின் கூட்டம் என்பதை ஞாபகப்படுத்துகிறேன் என்று அதட்டிக் கூறவேண்டிய நிர்ப்பந்தமும் பொன்னம்பலத்திற்கு ஏற்பட்டது திருத்தம் முதலில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மிகப் பெரும்பான்மை வாக்குகளால் ஏற்கப்பெற்றது. திருத்தப் பிரேரணை ஏற்கப்பெற்றமையால் மூலப் பிரேரணை வாக்குக்குவிடவேண்டாத நிலை உருவானதென்பதை தலைவர் சற்றுநேரஞ் சென்றே உணர்ந்து தடுமாற்றமடைந்து திருத்தத்தை இரண்டாம்முறை வாக்குக்குவிட வேண்டுமென்று கூறி இரண்டாம் திருத்தப் பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பெற்றது: திரும்பவும் திருத்தம் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் ஏற்கப்பெற்றது.

மறுநாள் தொடர்ந்துநடந்த கூட்டத்தில் வேறு ஒரு பெரியார் தலைமை வகித்தார். அன்று வாக்காளர் பதிவு பற்றிய விடயம் எடுபட்ட பொழுது பொன்னம்பலம் திரும்பவும் ஒரு திருத்தப் பிரேரணையைக் கொண்டுவந்தார். அத்திருத்தம் மூலப்பிரேரணையின் விடய வரம்பிற்கு அப்பாற்பட்டதென்ற ஆட்சேபணை எழுந்தது இறுதியில் திருத்தப் பிரேரணையை விவாதத்திற்கு அனுமதிப்பது என்ற முடிவைக் கூறிய தலைவர் சபையோருக்கு ஒரு எச்சரிக்கைவிட்டார். எச்சரிக்கை மிக நூதனமானது. ''கொண்டு வரப்பெற்ற திருத்தத்தை விவாதத்திற்கு அனுமதிக்கிறேன். ஆனால் இந்தத் திருத்தம் கொண்டுவரும் வாலிபரின் பேச்சுவன்மையிலும், ஆளுமையிலும் மயங்கிவிடாதீர்கள் என்பதுதான் அந்த எச்சரிக்கை. பொன்னம்பலம் கொண்டுவந்த திருத்தம் தோல்விகண்டது.

பொன்னம்பலம் கொண்டுவந்த திருத்தம் மிக அர்த்தம் நிறைந்தது. வாக்காளர் பதிவில் கடந்த 18மாதங்களில் 6 மாதகாலம் குறித்த தேர்தல் தொகுதியில் வசித்திருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை ரத்துச்செய்ய வேண்டுமென்பதே திருத்தம். இவ்வதிவிடக் கட்டுப்பாடு இல்லா

(5ம் பக்கம் பார்க்க)

## சூரசங்காரம்

முருகப் பெருமான் தேவர்களின் முறைப்பாட்டையும் சூரபன்மனின் தன்மையையும் கண்டு வேலாயுதத்தை ஏவியருளினார். சூரபன்மனின் உடலை இருகூறுக்கி வருக என்று கூறிய முருகப்பெருமான் வேற்படைக் கலத்தை ஏவினார். சிவஞானப்பிரகாச வேல்முருகப் பெருமானின் திருக்கரத்திலிருந்து புறப்படவே சூரனின் மாய இருளுருவம் தொலைந்தது. இருளில் மறைந்து செயற்பட முடியாத சூரன் மாமரமாகி உலகையும் தேவர்களையும் துன்புறுத்தவும் வேலாயுதத்தை எதிர்க்கவும் எண்ணிக் கடல்நடுவே மாமரமானான். பாதாளம் மேலுலகம் எட்டுத்திசைகள் எங்கும் நிறைந்த மாமரமான சூரன் வெறிபிடித்தவன்போல் தன் வாடி உலகையும் தேவர்களையும் வருத்தினான் சூரனின் இச்செயல்கள் கணப்பொழுதளவில் நிகழ்ந்தன. சூரனின் தன்மைகண்ட வேலாயுதம் கோபம்கொண்டு மாமரத்தை அழித்தது சூரன்தன் இயல்பான உருவத்துடன் வாளை எடுத்து வேலை வெட்ட எண்ணினான். அதற்கிடையில் வேல் சூரனுடலை இருகூறுக்கி ஆகாய கங்கையில் நீராடி முருகன் திருக்கரத்தை அடைந்தது சூரன் சேவலும் மயிலுமாகி முருகனை எதிர்க்கவந்தான் பச்சைமலை போலவும் சிவப்புமலைபோலவும் பெரிய பறவை வடிவுடன்வரும் சூரபன்மன் மேல் திருமுருகன் அருட்கண்பார்வை செலுத்தினார் உடனே சூரபன்மனுக்கு நல்லுணர்வு உண்டானது. முன்புபோல் தன்மானமோ புகழாசையோ சூரனுக்கு ஏற்படாத பக்குவத்தை அடைந்திருந்தான் மின்சாரம்பாய்ந்த கம்பி மின்சாரமயமாகவும் தரிசனவேதி எனும் சிறப்புற்றோர் பார்வையால் கரிய இரும்பு செம்மையான பொன்னாவது போலவும் சூரன் அசுரத்தன்மை நீங்கித் தேவர்க்கும்மேலான தெய்வத்தன்மையை அடைந்தான். முருகன்பணி செய்யவேண்டுமென்னும் உணர்வுடன் நின்ற சூரனை முருகப்பெருமான் வாகனமாகவும், கொடியாகவும் ஏற்றருளினார்.

ஆறுநாளும் முருகனிடம் தீட்சைபெற்றான் என்று சொல்லத்தக்க தத்துவ விளக்கத்தினை உடையது சூரன்போர் சூரன் தேவர் மூவாதிகளுக்கும் கிடைத்தற்கரிய பேற்றைப் பெற்றான் முருகப்பெருமானின் அருட்போரினைக் கண்ட புண்ணியத்தால் தேவர்களிடமிருந்த சிவத்துரோக பாபம் பூரணமாகத் தொலைந்தது. தொலையவே பகையற்ற நிலையில் சுதந்திரமான சுவர்க்க வாழ்வு தேவர்களுக்கு வாய்த்தது

பத்துவயதுப்பாலன் ஒருவன் தனக்குத் தந்தை கொடுத்த இனிப்பையே பின் தந்தைக்கே வழங்குவதுபோல இந்திரன் தனது வளர்ப்பு மகளாகிய தெய்வானையை முருகப்பெருமானுக்கு திருமண முறையால் கொடுத்து மகிழ்ந்தார் முருகனும் அகில உலக அதிபதியாகவும் சகல ஆன்மாக்களுக்கும் தலைவனாக இருந்தும் இந்திரனின் செயலை அன்புடன் ஏற்று இந்திரனுக்கு மட்டுமன்றிச் சகல உயிர்களுக்கும் இகபர நலன்களை வழங்குபவராக விளங்குகின்றார்

முருகப்பெருமானின் சூரன்போர் சூரனுக்கும் தேவர்களுக்கும் மட்டுமன்றி இன்றுவரையும் இனிமேலும் முருகபக்தர்கள் சிந்தித்தும் தரிசித்தும் துதிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

ஈண்டட எமக்கு இடர்செய்
அவுணரெலாம்
மாண்டே விளியும் வகை
புரிந்துகாத்தனையால்
வேண்டேம் இனியாதும்
மேலாயறின் கழற்கே
பூண்டேம் தொழும்பு
புகழேம் பிறாதமையே.

அருளாளன்

### நீர்வைக் கந்தசாமி தேவஸ்தானம் கந்தசஷ்டி தீர்த்தோற்சவம்

பொல்லாத வினைபோக்கிப் புண்ணியங்கள் தேடுவதற்கு
வல்லசுரர் மாய்த்தபுகழ் வாயாரப் பாடுவதற்கு
நல்லவர்கள் சேர்க்கையிலே நாமெல்லாம் கூடுதற்கு
நல்லநீர்வை தனையடைந்தோம் நல்லருளைப்புரிவாயே.

— நீர்வை ''முருகு''

## தவறிவிட்டது

அராலி கிழக்கு, அராலி வாட் இல 9, சின்னையா சிவலிங்கம், ஆகிய எனது அடையாள அட்டை 29-10-86 அன்று அச்சுவேலி பஸ்சில் தொலைந்துவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் சிவசக்தி கூல்பார், பஸ் ஸ்ராண்ட், யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C-3080]

---

மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியை சேர்ந்த திருமதி மல்லிகாகந்தசாமி என்பவரது சிவ அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைத்தால் நல்லதாகும். அல்லது தபாலில் அனுப்பவும்: சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் and புத்தகசாலை, சாவகச்சேரி. [C-5656

---

## கேள்வி அறிவித்தல்

### வவுனியா நகரசபை

பஸ் நிலையத்தில் உள்ள 14 தனமாடிக் கடைகளை வாடகைக்குக் கொடுப்பது சம்பந்தமான 9-10-86-ம் திகதிய கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

இதற்கான கேள்விப்படிவங்கள் வழங்கும் திகதி 11-11-86-ம் திகதி பிற்பகல் 3-00 மணி வரையும், கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி 13-11-86 ம் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இ. இராமலிங்கம்
செயலாளர்
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா.
30-10-86 A 3076

---

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் 'சான்றிதழ்'

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் சார்பில் அண்மையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கான 'சான்றிதழ்' வழங்கும் வைபவம் நாளை, யாழ்ப்பாணம் சென். சவேரியஸ் மகா வித்தியாலயத்தில், மேற்படி சங்கத்தின் தலைவர் திரு ஈ கே. குமரையா தலைமையில் நடைபெறவுள்ளது. (வி)

---

## உதைபந்தாட்டம்: இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், சனி

மாணவர் முன்னணியின் சார்பில் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மோதும்.

2-வது ஆட்டத்தில், யாழ்ப்பாணம் சென் பத்திரிக்ஸ் கல்லூரியை எதிர்த்து இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி மோதும்.

இவ்விரு ஆட்டங்களும் இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [வி]

---

## ஜி. ஜி. யின் —

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டால், தொழில் காரணமாகவும் உத்தியோகம் காரணமாகவும் தென்னிலங்கையில் தற்காலிகமாக வசிப்பவர்கள் தங்கள் வாக்குகளைத் தாங்கள் நிரந்தரக் குடிபதிகளாக உள்ள வடக்கு, கிழக்கு மாகாணத் தொகுதிகளிலேயே பதிந்து வைத்திருப்பர். அவ்வாறு வடக்குக் கிழக்கில் வாக்குப் பதிவு செய்யப்பெற்றிருந்தால் அவர்களுடைய வாக்கு அரசியல் போக்கைப் பரிபாலிக்கும் தெற்கில் சிங்கள இன மத்தியில் அவர்களுடைய வாக்கு அரசியல் போக்கைப் பரிபாலிக்கமாட்டாது. தனிப்பட்ட முறையில் ஒரு சில தமிழர் வெற்றியீட்டிய உறுப்பினரிடமிருந்து சில சலுகைகளைப் பெறலாம் ஆனால் தமிழினத்திற்கு எதுவித பயனுமில்லை மேலும் அன்னார் ஈழத்தில் வேரோடியிருக்கும் நிலைமை மங்கி தென்னிலங்கையில் பெருந்தொகைத்தமிழர் வாழுகிறார்கள் என்ற நியாயவாதம் உருவெடுக்காது தெற்கிலங்கையில் அலையில் மிதக்கும் வண்டல்களாக [Flotsam and Jetsam] காட்சியளித்துத் தமிழீழத் தாயகக் கோரிக்கைக்குக் குந்தகமாக அமைகின்ற நிலைமை ஏற்பட்டிராது.

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையிலும் இந்த வதிவிடக் கட்டுப்பாடு பாதகமாக அமைந்தது. பொருளாதார மந்தநிலையால் ஒருதோட்டத்தைவிட்டு வேறு வேறு இடங்களில் தொழில் தேடிப் பெறுகின்ற தொழிலாளர் இவ்வதிவிடக் கட்டுப்பாட்டால் இடப்பெயர்வின் நிமித்தம் வாக்குப்பதிவு கிடையாது வாக்கை இழக்கிறார்கள்.

சிங்கள மக்களைப் பொறுத்த மட்டில் வதிவிடக் கட்டுப்பாடு எதுவித பாதக விளைவுகளையும் கொண்டுவரமாட்டாது. அவர்கள் மிகவும்அரிதாகவே சிங்கள வரல்லாத மக்கள் பெருவாரியாக வாழும் தேர்தல் தொகுதிகளில் வதிவதுண்டு. சொந்த ஊரில் இருந்தாலென்ன? வேறு ஊரில் இருந்தாலென்ன? ஒரே இன வாக்காளர் மத்தியில் வாழும்பொழுது அவர்களுடைய வாக்கு சகபிரஜைகளுடன் சேர்ந்து அரசியல் போக்கைப் பரிபாலிக்கும்.

ஆனால் இந்த உண்மையை உணராமல் தமிழர்களை வதிவிடக் கட்டுப்பாட்டை ரத்துச் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை எதிர்த்தனர். காரணம்: இத்திருத்தத்தைக் கொண்டுவந்த பொன்னம்பலத்தின் பேச்சுவன்மையில் எழுந்த பொறாமை. பொறாமைப்படும் தலைவர்கள் பல வேறு தவறான நியாயங்களை எழுப்பி பாமர மக்கள் மனக்குழப்பம் அடையும் நிலையை உருவாக்குகிறார்கள் சிந்தனைத் தெளிவில்லாத சாதாரண மக்கள் பொன்னம்பலம் பேச்சு வன்மையால் தவறான வழியில் இட்டுச்செல்கிறார் என்ற பிரேமையில் பொன்னம்பலத்தின் எதிராளிகள் பக்கம் சார்ந்தார்கள் என்பது இந்நிகழ்ச்சியில் இருந்து தெளிவாகிறது.

மேலே விபரிக்கப் பெற்ற நிகழ்ச்சிநடந்தபொழுதுபொன்னம்பலம் 26 வயசு நிரம்பிய வாலிபன். கூட்டத்தில், கொழும்பில் வாழ்ந்த தமிழ் பெரியார்கள் ஏறக்குறைய அனைவரும் சமூகமளித்தனர். வடக்குக் கிழக்கிலிருந்தும் பிரதிநிதிகள் சென்றிருந்தனர். பொன்னம்பலம் அன்று அக்கூட்டத்தில் பேச்சுவன்மையால் நிகழ்த்திய தாக்கம் பெருமளவில் பொறாமையைக் கிளப்பியது என்பது இன்று காணப்படும் நிகழ்ச்சியிலிருந்தும் நிரூபிக்கப்படுகிறது சகல தீவிரவாத இளைஞர் இயக்கமும் தமிழீழத் தாயகமே தமது குறிக்கோள் என்கின்றனர். அப்பொழுது ஏன் திறமையையும் பண்பாட்டையும் நிருபித்த ஒரு தலைமையின் கீழ் இயங்கமுடியாது?

---

## பிரிவினையற்ற தமிழ் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ள வேண்டுமென கூறியுள்ளது. புளொட் அமைப்பு இலங்கை அரசின் ஒற்றை ஆட்சிஅமைப்பின்கீழ் எந்தவித யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாதென நிராகரித்துள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு தனது யோசனைகளில் பிராந்திய அமைப்பை வலியுறுத்தியதுடன் தமிழ்மக்களது பாரம்பரிய தாயகத்தை ஏற்றுக்கொள்ளாமையினால் அது தமிழ்மக்களின் அடிப்படை அபிலாஷைகளை பூர்த்தி செய்யத் தவறிவிட்டதென தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இரு பிரிவுகளாக பிரிப்பது தமிழ் மக்களின் தேசிய பாரம்பரியங்களை மிகவும் பலமாக பாதிக்குமென அச்சம் தெரிவித்துள்ளது

இலங்கை அரசின் அரசியல் தீர்வுக்கான உத்தேச யோசனைகளை நிராகரிப்பதற்கான காரணங்களாக தமிழ் போராளிகள் ஒழுக்கள் பின்வருவனவற்றையும் தெரிவித்துள்ளன.

★ மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்படவுள்ள சட்ட வாக்க நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் அதிகாரங்களால் மிகப்பலமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

★ சட்டம், ஒழுங்கு போன்ற விடயங்கள் தொடர்பாக மத்திய அரசுக்கு கட்டுப்படுத்தும் அதிகாரங்களும் உள்ளன;

★ மாகாணங்களுக்குள் உள்ள நீர்பாசன காணி அபிவிருத்தி திட்டங்களின் காணிப் பாவனை தொடர்பாக மத்திய அரசு முழு அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

★ மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளிலும் மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி-கே)

---

## என்னுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு மாணவன் விஜிதரன் காணாமல் போனமை குறித்து உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இச்சம்பவத்தையடுத்து வெளிமாவட்டங்களிலிருந்து இங்கு வந்துள்ள மாணவர்கள் மிகுந்த அச்சத்துடன் உள்ளனர் எனவே விஜிதரனைக்கண்டவர்கள் அல்லது அவர்பற்றிய தகவல்தெரிந்தவர்கள் தம்முடன் தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (வா-கே)

---

## பல்கலைக்கழக ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை எடுத்துக் கூறினர்.

தமது பாதுகாப்புக்குத் தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால் பல்கலைக்கழகத்திலேயே தங்குவதற்கான வசதிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் செய்துதர வேண்டும் என்று மாணவர் வேண்டுகோள்விடுத்தனர் உபவேந்தர் பதிலளித்துப் பேசுகையில் தம்மால் இயன்ற வரை நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில்:

''கடந்த காலங்களில் நாம் ஜனநாயக ரீதியிலான நியாய பூர்வமான போராட்டங்களையே முன்னெடுத்து வந்துள்ளோம் அந்தவகையில் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாணவன் விஜிதரனின் ஜீவமரணப் போராட்டத்துக்கு சகல பொது ஸ்தாபனங்களும் விடுதலை இயக்கங்களும் பூரண ஆதரவு தெரிவித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

---

## துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகஇருந்தது: அப்பாதையை சிரமதான மூலம் சீர்செய்வதற்கு 25க்குமேற்பட்ட பொதுமக்கள் ட்ரக்டர்ஒன்றில்சென்றுகொண்டிருந்தனர். அச்சமயம் பற்றைக்குள் பதுங்கி இருந்த ஆயுதப்படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். ட்ரக்ரரில் சென்றவர்கள் பீதிகொண்டு இறங்கி ஓடினார்கள் அந்தப் பாதையால் அதேசமயம் சென்றுகொண்டிருந்த கிளிநொச்சி ம. வி. ஆசிரியர் திரு. சிவராசா ஒருபெண் உட்பட பலர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்தனர்.

மேலும் அப்பாதையால் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவர்களை மறித்த ஆயுதப்படையினர் தவறான வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்ததாகவும் தெரிய வருகிறது.

ஆயுதப்படையினரின் இந்த நடவடிக்கைகளைத்தொடர்ந்து பீதியடைந்த இரத்தினபுரம் மக்கள் மீண்டும் இடம் பெயர ஆரம்பித்துள்ளனர். [மா]

---

## நாலுபேர்..,

(1ம் பக்கம் பார்க்க)

றில் நாலுபேர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் 200 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

---

### புனிதமான இயக்கங்களுக்கு உருக்கமான வேண்டுகோள்

எனது அண்ணன் மகனாகிய அருணகிரிநாதன் விஜிதரனை (வணிகமாணி மாணவன் யாழ் பல்கலைக் கழகம்) கடந்த செவ்வாய் (4-11-86) இரவு முதல் காணவில்லை. அவரை மீட்டுத்தர உதவுமாறு புனிதமான இயக்கங்களை உருக்கமாக கேட்டுக் கொள்கின்றேன்.

தளையசிங்கம் இராமநாதன்,
சிவராசா அவெனியூ,
திருநெல்வேலி.
(C 5662)

---


## எமது புதிய வெளியீடுகள்

[1] ராஜா ★ ரம்யாகிருஷ்ண ★ செந்தில்
''புதிய பூவிது''
(R V. V. ORIGINAL)

(2) ராஜேஸ் ★ K. R. விஜயா ★ ராதாரவி
''மேல் மருவத்தூர் அற்புதங்கள்''
(PYRAMID MASTER)

[3] கமல் ★ ரேவதி ★ சத்தியராஜ்
''புன்னகை மன்னன்''
(CAMERA COPY)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 23665.
(A 2855)

---

வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
ரியோ
10-30, 2-30 4-30, 6-30
Nut Cracker
Strictly for Adults only
[Colour]

---

## தமிழர் கலாசார அவை
# கவின்கலையரங்கம்

இடம்: யாழ். வின்ஸர் கலை அரங்கம்
காலம்: 9-11-1986 பிற்பகல் 3-00 மணிக்கு

-- நிகழ்ச்சிகள் --

(1) வேய்ங்குழல் இசை
செல்வன் மதனகரன் தயாபரன்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வழங்கும்
(2) 'தர்மயுத்தம்'
(நாட்டிய நாடகம்)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வழங்கும்
(3) 'வால்பேத்தைகள்'
[நாடகம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசம் ரூபா 3/- மட்டுமே (A3075)

## இன்று நல்லையில் திருக்கல்யாணம்

# தெய்வத் திருக்கல்யாணம் உணர்த்தும் பொருளென்ன?

இன்று சனிக்கிழமை (8-11-86 நல்லூரில் திருமுருகனுக்கு ஒருநடருவிழா - சூரனைச் சங்கரம் செய்து சேவலும் மயிலுமாகக் கொண்டருளிய பிறகு, ஆறுமுகனுக்கு இரு தேவிமாரும் மலர்மாலை சூடும் தெய்வத் திருமணம். இதை எழுதும்போது:-

''ஆயிரம் மலர் எடுத்து
அழகனுக்கு மாலையிட்டு''
''சிவகாமி படிமீது
விளையாடும் அழகன்''
''திணைசுந்த வள்ளி
சிறுமிக்கும் இனியன்''

என்று சூலமங்களம் சகோதரிகள் பாடியது என்மனத்தைக் கவர்ந்த பாட்டுக்கள் என் நெஞ்சில் ஒலிக்கின்றன.

### திருக்கல்யாண வைபவம்

இன்று நல்லூரில் ஆகமவிதி வழுவாது திருமண வைபவம் கிரியா மந்திர பாவனைகளுடன் ஆரம்பமாகி மாங்கலிய தாரணமானதும், வள்ளிதேவசேனாசமேத சிவசண்முகப்பெருமான் இனிய மங்கள வாத்திய இசையுடன் வெளிவீதி பவனி வந்தபின் திருக்கல்யாண வைபவம் பூர்த்தியாகும்.

### கடவுளுக்கும் திருமணமா?

'கடவுளுக்கும் திருமணமா? அவருக்கும் மனைவிதேவையா?' என்ற ஐயம் எம்மனதில் ஏற்படுவதுண்டு. இந்த ஐயத்தைப்பற்றித் 'திருக்கோயில்' ஆசிரியர் திரு ந ரா முருகவேள் அவர்கள் தமது சஞ்சிகையில் 'வள்ளி தெய்வயானை'' என்ற கட்டுரையில் நல்லதொரு விளக்கம் தந்திருக்கிறார்கள். இவ்விளக்கத்தை வாசகர்கள் அறியும் பொருட்டு அப்படியே இங்குதருகிறேன்.

### ஐயமும் விடையும்

''தெய்வயானையம்மை திருமணம், வள்ளியம்மை திருமணம்பற்றி ஆராயுங்கால் நம்மிற்பலருக்குக் கடவுளும் திருமணம் செய்துகொள்வாரா? கடவுளுக்கும் மனைவி தேவையா? என்பனபோன்ற பல ஐயப்பாடுகள் ஏற்படுவதுண்டு இத்தகைய ஐயப்பாடுகள் தொன்றுதொட்டே நிகழ்ந்துகொண்டு வந்துள்ளன எனத் தெரிகின்றது.

''மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில் திருச்சாழல் என்னும் பகுதியில் ''மலையரசனின மகளாகியபார்வதியைச் சிவபெருமான் உலகறியும்படி திருமணம் செய்துகொண்டார்'' என்பது எதற்கு என்று ஒருத்தி வினவ; அதற்கு மற்றொருத்தி அங்ஙனம் சிவபெருமான் செய்து காட்டாமல் போயிருப்பின் அவன் கலைகளில் நவின்றருளிச் செய்த பொருள்களையெல்லாம் அறிந்துகொள்ள இடலாமல் உலகனைத்தும் கலங்கித் தடுமாறிப் போயிருக்கும். வையத்து வழ்வாங்கு வாழும் முறைகளைக் கலை நூல்களில் வகுத்துக் கூறியருளிய இறைவனே அங்ஙனம்தான் கூறியனவற்றைத்தானே நடத்திக்காட்டியும் அவற்றை நமக்கு விளக்கித் தெளிவுசெய்தருளினர். சொல்லொன்றும் செயலொன்றுமாய்த் திரியும் நம்மைப் போல அன்றித் தான் சொல்லியவற்றைத் தானே கடைப்பிடித்து நம்பொருட்டு நடந்து காட்டியருளினன் இறைவன்'' என விடை கூறுவதாக.

மலையரசன் பொற்பாவை
வான்றுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான்
என்னுமது என்னேடி?
உலகறியத் தீவேளா து
ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்பு பொருள்களெல்லாம்
கலங்கிடுங்காண் சாழலோ!

என்னுமினிய திருப்பாடல் அமைந்திருத்தல் சிந்தித்துணரற்பாலது''.

செ. இரத்தினசபாபதி

# இன்றைய பலன்

மாதம்: ஐப்பசி
திகதி: 22 (8-11-86)
கிழமை: சனி
திதி: ஸப்தமி மு இ. வரை
நஷத்திரம்: உத்தராடம்
மு. ப. வரை

மேடம்: மனநிறைவுக்கும் மதிப்புயர்வுக்கும் இடமுண்டு. தொழில் நன்மாற்றமுண்டு அன்னைவழியால் ஆதரவுண்டு

இடபம்: வாழ்க்கை மலர் தூவிய பஞ்சமாக அமையும் தன் தொழில் சிறப்புக்கும் இடமுண்டு. எதிலும் வெற்றியை முத்தமிடுவீர்கள்

மிதுனம்; இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கை நன்று. கடமையில் சோர்வு தென்படும். எதிலும் மனத்திடத்துடன் செயலாற்றவும்

கடகம்: களஸ்திரம் சேரும். கண்ணியம் பிறக்கும். வருமானத்தில் திருப்தி காணுவீர்கள். சுமாரான தினம்.

சிங்கம்; நீண்ட கால தொடர்பு இன்று துண்டிக்கப்படும் ளமை நினைவுகள் வேதனையைத் தரும். எதிர்ப்புகளும் பலப்படும்.

கன்னி: வெளியூர்ப் புதினமும் உண்டு கருத்துவேற்றுமைகள் மறையும். குருவின் ஆசியுடன் நல்வாழ்வும்கிடைக்கும்

துலாம்: மனைவாழ்வு சிறக்கும். தொழில்நிலை மாறும். பிரயாணமும கைகூடலாம். சுபதினம்.

விருச்சிகம்: இலட்சியப் பாதையை நோக்கி வீறுநடை போடுவீர்கள். அன்புக்கரங்கள் அணைக்கும். தொழில் முன்னேற்றமுண்டு.

தனுசு: விஷமிகளால் தொல்லைகள் உருவாகும். பயிர்ச் செய்கையில பாதிப்பு ஏற்படும். நண்பர்கள் சகவாசத்தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

மகரம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். எதிரிகள் தாக்குவர். எவ்விடயத்திலும் நன்கு சிந்தித்து முடிவெடுக்கவும.

(7ம் பக்கம் பார்க்க)

# ஓங்கிநின்ற பெஸ்கி!

ஓய்வுறக்கந் தனைமறந்து எமதயல் வந்து
ஈரடியும் மணிச்சிலம்பும் இராமாயணமும்
வாய்க்கினிய மேகலையும் விரிவாய்க் கற்று
வாடினுலும் மகிழப்பூ வழங்கும் மணதனை
மாய்வதற்கோ உடலெடுத்தோம் மனிதன் வாழ
மாதொண்டு புரிகவென்று மறைச்செங் கருப்பாய்த்
தாய்த்தமிழின் சுவைபிழிந்து தேம்பா வணியைத்
தந்தவீர மாமுனிக்கித தமிழ்நான் படைத்தேன்;

நீருக்குள் அழகுமிழ்ந்து நகைக்குங் கமலம்
நிலம்வீழ்ந்தால் அறிவரதன் நிலையை இங்கு
தேருந்து சுவூஞ்சல் திசையெட் டுமாடித்
தமணியாண்டோ ருமழிவரே தருமங் கொன்று
பேருக்கே உழைத்தலைந்து புகழாத் தேனில்
போதைகொளும் வண்டுகளும் பிறருக் கீந்து
ஊருக்காய் வாழ்ந்துலகில் இமயச் சாலபு
ஓங்கிநின்ற பெஸ்கியின்பேர் என்றும் வாழும்.

— பாஷையூர் மு. சிங்கராயர்

(8-11-86 சனி வீரமாமுனிவர் நினைவுதினம்)

## இந்துக்கள் மனங்களில்வாழும் வண. தேவராஜன்

அன்பான சிரிப்பு, கனிவான பார்வை, பிரகாசமான முகம், கம்பீரமான தோற்றம், வசீகரமான குரல், சமூக நோக்கு, ஆளுமை நிறைந்த சமய சமூக பிரசங்கங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்குபவர் அடிகளார் அருட்திரு தேவராஜன்.

இளவாலையில் தோன்றிய அடிகளார் மயிலை பெரியநாட்டுத் தேவன்துறை, ஊறணி, பலாலியிலுள்ள தேவாலயங்களில் பங்குத் தந்தையாக 1980 ஆகஸ்ட் தொடக்கம் 1986 செப்டம்பர் வரை கிட்டத்தட்ட ஆறு வருடங்கள் சமயப் பணிபுரிந்தார்

அடிகளாரது சமயப் பணியுடன் சமூகப்பணியும் இணைந்திருந்தது, இப்பணிகளால் அவர் வாழ்ந்த பிரதேசத்தில் எல்லா மக்களும் பயன்பெற்றுர்கள். இவரது பெரும்பணி பொதுவாக வலிகாமம் வடக்கு பகுதி மக்களுக்கு குறிப்பாக கடலோரக கிராம மக்களுக்கு கிடைக்கப்பெற்றது. இன்றைய அரசியல் சூழ்நிலையில் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், தொழிலாளர்கள் என்போரது ஜீவாதாரப்பிரச்னைகளில் பங்கு கொண்டு ஒவ்வொரு வழியிலும் நிவாரணம் பெற்றுத்தர முன்நின்றுர்.

வீரமாணிக்க தேவன்துறை. பெரியநாட்டுத் தேவன்துறை. மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை தையிட்டி, பலாலி போன்ற கிராமங்களில் வாழும் இந்துக்களின் நன்மையிலும் தீமையிலும் அவரவர் வீட்டுக்குரியவர் போல் முன்னின்று நன்மை தரும் பல காரியங்களைச் செய்திருந்தார்.

இந்துக்களுக்கும், கத்தோலிக்கர்களுக்குமிடையே ஓர் நெருக்கமான உறவினை இப்பெருமகன் இப்பகுதிகளில் கட்டியெழுப்பியிருந்தார்,

தமிழர் கலாசார நிகழ்வுகளில் அக்கறைகொண்ட அடிகளார் நாதஸ்வரம், பரதம் போன்ற தமிழர் கலைகளில் கத்தோலிக்கப் பெருமக்களையும் கூடுதலான ஆர்வம்கொள்ளச் செய்திருந்தார்.

அடிகளாரது பிரியாவிடை வைபவத்தில் கத்தோலிக்கர்களுடன் இந்துக்களும் பெரும் பங்கு கொண்டிருந்தார்கள் இவ்வைபவத்தில் வீரமாணிக்க தேன்வதுறை கண்ணகி அம்மன் ஆலய பூசகர், ஆனந்தசிவம் ஐயர், சட்டத்தரணி அ. குமரகுரு, மயிலிட்டி பிரஜைகள்குழு தலைவர் திரு வி இரடனராசா போன்றோரது உரைகள் அடிகளாரது சேவைகளைக் கோடிட்டுக் காட்டியிருந்தன.

பிரியா உள்ளத்தோடும், பிரிய உள்ளத்தோடும் ஊறணி மக்களினுல் வழங்கப்பட்ட வாழ்த்துமடல் அவரது சிறப்பினைப் பாடிநிற்கின்றது.

எம். ராஜா- யோகானந்தம்

## கூட்டம்

சுண்டுக்குளி, வெள்ளி நவாலி சென். பீற்றேஸ் றோ க. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பாடசாலைமண்டபத்தில் நாளை பிற்பகல் அதிபர் நா. யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. [வா]

## இன்று பஜனை

யாழ்ப்பாணம், சனி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியரின் அகில உலக அகண்டநாம பஜனை இன்றும் நாளையும் திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியில் நடைபெறவுள்ளது.

நாளைய நிகழ்ச்சியாக காலை அமுதன் அண்ணாமலையின் கீர்த்தனை இடம்பெறும். நண்பகல் 12 மணிக்கு திவ்ய ஜீவன சங்கத்திலும், 12-15 மணிக்கு கண்ணன் இசைப் பயிற்சி நிலையத்திலும் அவர் பாடவுள்ளார். [ஊ]

## கிரிக்கெட் மத்தியஸ்தர் விரிவுரைவகுப்பு

யாழ்ப்பாணம், சனி யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்திற்குபுதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கான விரிவுரை வகுப்புகள் யாழ் இந்துக்கல்லூரியில் நடந்த முதலாம்திகதி முதல் காலை பத்துமணி தொடக்கம் பிற்பகல் ஒருமணிவரை நடைபெற்றுவருகிறது.

கிரிக்கெட் விளையாட்டின் 42 விதிமுறைகளும் மிகவிரிவான முறையில் விளக்கப்படும். இவ்வகுப்புகள் நவம்பர் முதலாம் திகதிமுதல் நவம்பர் 22ம் திகதிவரைபிரதிசனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பரீட்சைநடைபெறும்.

பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளின் நலன்கருதி இம் முறை தமிழிலும் ஆங்கிலத்திலும் விடை எழுதுவதற்கு வசதியாக வினுத்தாள்கள் மேற்படி இரு மொழிகளிலும் தயார் செய்யப்படவுள்ளதாக சங்க செயலாளர் திரு. ஆர். செல்வரட்ணம் தெரிவித்துள்ளார். [சி]

## நன்றி நவிலல்

22-10-86 இல் நடைபெற்ற எங்கள் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இங்ஙனம்

திரு. திருமதி யோகரட்னம்.
43 றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

C 5646


இலங்கையில் முதல் முதலாக

தேசிக்காய் வாசனையுடன்




எம்டீ சோப்




115g ரூபா 2/-




650g ரூபா 12/00

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறொரு சவர்க்காரம் வாங்க முடியுமா...... இன்றே வாங்குங்கள்

புதிய எம்டீ சோப்

எம்டீ என்ரபிறைஸ்,
14, 16, கைத்தொழிற்பேட்டை – அச்சுவேலி.

[A-746]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

ஆனைக்கோட்டையில் வசித்துக் காலஞ் சென்ற சோமசுந்தரம்சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமின்றிமரித்த மரணசாதன மில்லாத யாரணச் சொத்துக்களுக்கு தத்துவப் பத்திரத்திற்கான விண்ணப்ப விடயத்தில்.

சுப்பிரமணியம் கைம்பெண் சிவபாக்கியம் ''கார்த்திகை'' ஆனைக்கோட்டை.

மனுதார்

வரி இல: T/3860

எதிராக

1. சுப்பிரமணியம் சோமேஸ்வரன், ஆனைக்கோட்டை.
2. சுப்பிரமணியம் சிவபாலன், ஆனைக்கோட்டை.
3. சுப்பிரமணியம் சிறிநிவாசன், ஆனைக்கோட்டை.

எதிர்மனுதார்கள்:

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்டகாலஞ் சென்றவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 21ந் திகதியன்று 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்றதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1985ம் ஆண்டு சித்திரை மாதம் 23ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

பதிவாளர்.

வரைந்து.

வ. மயில்வாகனம்,
சட்டத்தரணி.

24-10-86

காரணம் காட்டும் திகதி 28-11-86 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

[A 5567]

## செந்தில் குமரன் திருக்கல்யாணம்

யாழ்ப்பாணம், சனி

இன்று 8-ம் திகதி சனிக்கிழமை வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் காலை 7-30 மணிக்கு ஸ்நானாபிஷேகமும், தீபாராதனையும் மாலை 4-30 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெற்று செந்தில் குமரன் வள்ளி தேவசேனாதி சமேதராகப் பூந்தண்டிகையில் வெளிவீதியுலா வருவார்.

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ் சென்ற ஆறுமுகம் வைரவப்பிள்ளை என்பவரின் மரணசாதன மெழுதப்பட்ட மரணச்சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியர்:

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. ரி/293

வைரவப்பிள்ளை வேனிலான் முருகுந்தனை, தெல்லிப்பழை.

மனுதார்.

எதிர்

சங்கரப்பிள்ளை சந்திரபலனும் பெண் மதிவேனில், இருவரும் முருகுந்தனை தெல்லிப்பழை.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.


அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு திசெம்பர் மாதம் 3ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 20ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்,

(மு. யோககுமார்)
மனுதாரின் சட்டத்தரணி.

C 5623



## 28 பெண்கள்பாடசாலை கோஷ்டிகளின் வலைப்பந்தாட்டப் போட்டி 10-ம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

மாணவர் முன்னணி நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கிடையில் நடாத்தும் வலைப்பந்தாட்டப்போட்டி இம்மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் யாழ்ம வட்டத்திலிருந்து மொத்தம் 28 பெண்கள் பாடசாலைக் கோஷ்டிகள் முதல் தடவையாகக் கலந்துகொள்ளவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இரு பிரிவுகளாக நடாத்தப்படும் இப்போட்டியில் 'ஏ' பிரிவில் 14 கோஷ்டிகளும். 'பி' பிரிவில் 14 கோஷ்டிகளும் கலந்து கொள்கின்றன.

'ஏ' பிரிவில் கலந்து கொள்ளும் கோஷ்டிகளின் விபரம் வருமாறு:

சுண்டிக்குளி மகளிர் பாடசாலை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மட்டுவில் ஸ்கந்தபுர ஸ்கந்தா, அத்தியார் இந்துக் கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சரவெட்டி திருஇருதயக் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் கன்னியா மடம், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

'பி' பிரிவில் கலந்து கொள்ளும் கோஷ்டிகளின் விபரம் வருமாறு:-

யாழ். ஆங்கில கன்னியர் மடம், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நெல்லியடி ம. மகா. வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை கொன்வென்ற், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி. (வி)

## விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம். சனி

இன்று யாழ். வண்ணை துர்க்கா வெளியீட்டகம் நல்லை ஆதீனத்தில் நிகழ்த்தவிருந்த ''நல்லூரான் திருவடியை நம்பு'' என்னும் கவிதைத் தொகுப்பின் வெளியீட்டுவிழா தவிர்க்கமுடியாத காரணங்களினால் எதிர்வரும் 14-ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக இதன் தொகுப்பாசிரியர் வண்ணைக் கவிஞன் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்: இதயம் பூரிப்பால் விம்மும். கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். நன்னாள்.

மீனம்: கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள். உடல்நலம் குன்றும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வினாத்தாள்களைகொடுத்துதவ 'இன்டரக்ற்' கழகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம் சனி

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட க. பொ. த. சாதாரண தர மாணவர்களுக்கு உதவும் முகமாக யாழ் செல்ஜோன்ஸ் கல்லூரி 'இன்டரக்ற்' கழக மாணவர் கடந்தகாலபரீட்சை வினாத்தாள்களை சேகரித்து அவர்களுக்குவழங்க முன்வந்துள்ளனர்,

கடந்தகாலங்களில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண பரீட்சைவினாத்தாள்களை சேகரித்து இவர்கள் யாழ் அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளனர். இதனை பெறவிருப்பும் அகதிமாணவர்களும், பிற மாவட்டங்களிலிருந்து பாதிக்கப்பட்டு இங்குவந்த மாணவர்கள் கல்விபயிலும் பாடசாலை அதிபர்களும் இதனை பெற்றுக்கொள்ளலாம்.

பாதிக்ப்பட்டுவந்த மாணவர்களது விபரங்கள் அடங்கிய பட்டியல்களை பாடசாலை அதிபர்கள் சமர்ப்பித்தும் தனிப்பட்ட அகதிமாணவர்கள் தங்களது முழுவிபரங்களையும் யாழ் உதவித்திட்டமிடல் பணிப்பாளருக்கு எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ் அரசாங்க அதிபர்கேட்டுள்ளார். [சி-ஒ]


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி

★ சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம்மாதம் 15-ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதி Labourers ஆக செல்ல விரும்புவோர் 14-ம் திகதிக்கு முன்னதாக பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:

N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் வங்களாவடிச் சந்தியல் நிறுவப்பட்டுள்ளது.

★ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூரஸ் என்னும் பெயரில் குப்பிளான் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

[A-2845]



## முதன் முறையாக யாழ் நகரில்!

இலங்கையிலே மிகப்பெரிய கோழிப்பண்ணையில் விஞ்ஞான முறைப்படி, மிருக வைத்தியர்களின் ஆலோசனைக்கிணங்க வளர்க்கப்பட்டு இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுக்கமைய

[HALAL - ஹலால்], சுகாதார முறைப்படி தயார்படுத்தப்பட்ட சுவைமிக்க

கோழி இறைச்சி!!

"Bairaha Farm Broilers"

[(B)பைரா (F)பாம் புறெய்லர் கோழி இறைச்சி]

1 Kg - 62/50

குறிப்பு:

★ பொருட்கள் கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்டவாகனத்தில் Freezer Truck) இல் தருவிக்கப்பட்டு, இங்கு குளிரூட்டிய அறையில் (Cold Room)இல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது எம்மிடம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

✳ மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்:

The Medical Hall மெடிக்கல் ஹோல்

No. 224, Hospital Road,
Jaffna.
Phone - 22575

இல. 224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22575

[A 2851]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 8-11-86

# தமிழ்க்குழுக்களின் கருத்துக்கள்மீது டிக்ஸிற்-ஜனாதிபதி பேச்சுவார்த்தை

கொழும்பு, வெள்ளி

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக அரசாங்கம் முன்வைத்த உத்தேச யோசனைகளுக்கு தமிழ்க் குழுக்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் கடந்த புதன்கிழமை இரவு ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் சுமார் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடாத்தினாரென ராஜதந்திர வட்டாரங்கள் நேற்று தெரிவித்துள்ளன.

நேற்று புதுடில்லி சென்றுள்ள இந்தியத் தூதுவர் இவ் வாரத்திற்குள் இரு தடவை ஜனாதிபதி ஜெயவர்த்தனவை சந்தித்துள்ளார். புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும், வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தும் உடனிருந்தனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசாங்கம் இனப்பிரச்னை தீர்வுக்காக முன்வைத்துள்ள உத்தேச யோசனைகள் தொடர்பாக தமிழர்விடுதலைக் கூட்டணி எழுப்பிய பிரச்னைகள் பற்றியும் போராளிகள் குழுக்கள் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

இராஜதந்திர வட்டாரங்களின் பிரகாம் கூட்டணியினதும் போராளிகள் குழுக்களினதும் கருத்துக்கள் இந்திய அதிகாரிகளால் இலங்கை அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் குழுக்கள் இனப்பிரச்னை தீர்வுக்கு மொழிவாரி மாநில அமைப்பு ஒன்றே வேண்டுமென்று வலியுறுத்துவதாகவும் தெரியவருகிறது. புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இவ் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் திரு. டிக்ஸிற்றுக்கும் இடையில் கடந்த தடவை நடைபெற்ற சந்திப்பின்போது இலங்கை அரசாங்கத்தின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் எவ்வித திருத்தத்தையும் மேற்கொள்வதற்கு தயாரென ஜனாதிபதி கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ் இராஜாங்க வட்டாரங்கள் தமிழ் குழுக்கள் இலங்கை அரசின் யோசனைகளுக்கு சாதகமான பதிலை அளிக்காவிட்டால் பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்ட தான் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தயாரென அவர் மேலும் கூறினாரெனவும் தெரிவித்துள்ளன.

## காங்கேசனில் மா, சீனியுடன் இரு கப்பல்கள்

சுண்டுக்குளி, வெள்ளி

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு உணவுப்பொருட்களுடன் நேற்று முன்தினம் இருகப்பல்கள் வந்துசேர்ந்துள்ளன.

இவற்றில் 'மாத்தறை' என்னும் கப்பல் 950 தொன் சீனியுடனும் 'மேக்ஸ்கொழும்பு' என்னும் கப்பல் 3000 தொன் மாவுடனும் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றுமொரு மாக்கப்பல் இன்னும் சிலதினங்களில் இங்குவந்து சேரவிருப்பதாகவும் தெரிவித்த உணவுத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தற்பொழுது சீனி இறக்கும் வேலைகள் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார். (சி)

## திருகோணமலையில் 3 முகாம்களிலிருந்த அகதிகள் பலவந்தமாக அகற்றப்பட்டனர்

### பிரஜைகள் குழு மேலிடத்துக்குப் புகார்

திருகோணமலை நிருபர்

திருமலை நகரில் மூன்று முகாம்களில் தங்கியிருந்த சுமார் 1500 அகதிகள் கடந்த மாதம் 29ம்திகதி சீனன்குடாவிலுள்ள ஒரு இடத்திற்கு பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். பிரஜைகள் குழுவினர் இதை ஆட்சேபித்தபோதும் அக்கறை காட்டப்படவில்லை.

சூசையப்பர் கல்லூரி, அர்ச் சூசையப்பர் தமிழ் பாடசாலை, அர்ச் மரியாள் பெண்கள் பாடசாலை ஆகிய மூன்று முகாம்களில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சீனன்குடாவிலுள்ள 'கிளப்பன்பேர்க்' என்னும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பிரஜைகள் குழுவினர் மேலிடத்திற்கு புகார் செய்துள்ளனர்.

## சகல கிளினிக்குகளும் இன்றுமுதல நடைபெறும்

யாழ்ப்பாணம் சனி

யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போராட்டம், பொதுமக்களின் நன்மை கருதி இரண்டுவார காலத்துக்கு இடைநிறுத்தம் செய்யப்பட்டு இன்று முதல் மீண்டும் சகல கிளினிக்குகளும் இயங்கவுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையின் அனைத்து ஊழியர் சங்க மகாநாடு நேற்று நடைபெற்றது. இம் மகாநாட்டிலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

## நாளை கைலாசபதி அரங்கில் கல்வியியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

மாணவர் முன்னணியும் மறுமலர்ச்சிக் கழகமும் நடத்தும் கல்வியியல் கருத்தரங்கு ஞாயிறு காலை 9 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதியரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் விரிவுரையாளர்கள் உரை நிகழ்த்துவர்.

இறுதியில் பள்ளி எழுந்திடுவீர் நாடகமும் நடைபெறவுள்ளது.

யாழ் குடாநாட்டிலுள்ள சகல பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் கல்விமான்கள் ஆகியோர் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [மா]

## கப்பல் மீது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றிப்பறந்து நாலாபக்கமும் தாக்குதல் நடத்தியது. இதல் நான்கு இளைஞர்கள் காயமடைந்தனர்.

இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட பலரக குண்டுகள் சுமார் ஒன்றரை மைல் தூரத்திலுள்ள வீடுகளைச் சேதப்படுத்தியும் வீடுகளிலிருந்தவர்கள் சிலரையும் காயப்படுத்தியுமுள்ளன.

சுமார் நான்கு பொதுமக்கள் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேதமடைந்த கடற்படையினரின் படகில் காயமடைந்தவர்களை ரோந்து விசைப்படகு ஒன்று ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறைப் பக்கம் சென்று மீண்டும் இன்னோர் விசைப்படகுடன் வந்துசேர்ந்தது. ஆக மொத்தம் ஐந்து கடற்படைக் கப்பல்கள் வல்வை இராணுவ முகாமுக்கு எதிரில் கடலில் நிலைகொண்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலால் ஹெலி பின்வாங்கியது. இராணுவத்தினர் தரப்பில் பலர் படுகாயமுற்றனர். புலிகளின் தரப்பில் ஒருவர் காயமடைந்தார்.

பின்னர் மாலை 5-30 மணியளவில் மீண்டும் 4 ஹெலிகொப்டர்கள் பறந்து தாக்குதல் நடாத்தியது. அதிலும் 3 ஹெலிகொப்டர்கள் முகாமினுள் தரை இறக்கப்பட்டன. பலத்த சிரமத்தின் மத்தியிலேயே முகாமுக்குள் அவை தரையிறங்கின. பின்னர் மாலை ஆறு மணியளவில் சகல ஹெலிகொப்டர்களும் அவ்விடத்தை விட்டகன்றன. (மா)

## இராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டவண்ணமிருந்தனர்.

காலை 11-10 மணியளவில் மக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

காதல் பிரச்னைகாரணமாக இராணுவ முகாமில் தஞ்சம் கோரியிருந்த இந்த நபர், பின்னர் விடுதலைப் புலிகள் இயக்க யாழ். குடா நாட்டுத் தளபதி திரு. கிட்டு உட்பட பல முக்கிய உறுப்பினர்களை கொலை செய்வதற்கு கிரனேட் கண்ணிவெடி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டதும்; பொதுமக்கள் கொடுத்த இரகசியத் தகவலின் பேரில் விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட இந்த நபரிடமிருந்து மேல் குறிப்பிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

மேலும் விசாரணையின் பின்னர் அவருக்கு நேற்றுக்காலை மரணதண்டனை விதிக்கப்பட்டது. (மா)

## ஈ.பி.ஆர்.எல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காப்பு வழங்க வேண்டியது கடமை என்பதை வலியுறுத்துகிறோம்.

ஏற்கனவே நிலவிவரும் பிரதேச முரண்பாடுகள் இது போன்ற நடவடிக்கைகளினால் மேலும் கூர்மையடையும் இதனை விடுதலையில் நேசமுள்ள யாவரும் புரிந்துகொண்டு செயற்படவேண்டியது அவசியமாகும். (மா)

## தலைமன்னார் சம்பவம்

கொழும்பு வெள்ளி

தலைமன்னாரில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய 17 பேரின் சடலங்களும் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளாக இருக்கலாம். என்றும் இவர்கள் வந்த படகு காலநிலை சீரின்மை காரணமாக கடலில் மூழ்கியிருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும் அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ)

## மரண அறிவித்தல்

### சாமுவேல் போல் இளையதம்பி

நவாலி தெற்கைச் சேர்ந்த சாமுவேல் போல் இளையதம்பி (இளைப்பாறிய ஜெயிலர்) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அரியமலரின் அன்புக்கணவரும், சோதிமலர், ஜீவமலர் [ஆசிரியை சொன்ஞ பிட்டி, மெதடிஸ்த பாடசாலை], மகிழ்மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணபாலன் (டென்மார்க்), தயானந்தன் [ரேணுகா என்ரபிறைஸ்], ஜீவானந்தன் [C.T.B. பொறியியல் பிரிவு] ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி லூசி தேவசகாயம், திருமதி மேரி ஆனந்தம், S B ஆசீர்வாதம் [கண் வைத்தியசாலை, கொழும்பு] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். நல்லடக்கம் 9-11-86 ஞாயிறு காலை 10-00 மணிக்கு நவாலி சேமக்காலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: J. ஜீவானந்தன். (C 5661)

### முத்துத்தம்பி சற்குணம்

கொக்குவில், உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்டு சபாவில் இருந்த முத்துத்தம்பி சற்குணம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கொக்குவில் முத்துத்தம்பி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மனோரஞ்சிதத்தின் அருமைச் சகோதரனும், இராசரத்தினத்தின் மைத்துனரும், சாந்தி, கோபி, ராதாவின் அன்புத் தந்தையும், உரும்பராய் தவரத்தினம் மீனும்பாள் ஆகியோரின் மைத்துனருமாவார். நல்லடக்கம் சபாவில் நடைபெறுகிறது.

தகவல்; மாமனார் நா பொன்னுத்துரை,
1986-11-08 உரும்பராய். C 5659]

### சித்தப் பலம் வவா

தம்பாலை வவா அகாலமரணமானார். இவர் சித்தம்பலம், நல்லம்மாவின் அன்பு மகளும். கந்தசாமி உருக்குமணி, சின்னத்தம்பி, நவமணி, மயில்வாகனம் தங்கமணி, செல்வராசா, தவமணிதேவி, தரோஜினிதேவி துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும். மார்க்கண்டு, தேவராசா, ஜெயராசா, இராசாத்தி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார், அன்னாரின் பூதவுடல் தம்பாலை மயானத்தில் இன்று 8-11-86 பி. ப. 1 மணியளவில் தகனம் செய்யப்படும். உற்றார் உறவினர் இதனை ஏற்றுக்கொள்ளவும். [C-5660]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126

## மரண அறிவித்தல்

### வைத்தியநாதர் பொன்னம்மா

திருமதி வைத்தியநாதர் பொன்னம்மா காலமாகிவிட்டார். இவர் வைத்தியநாதரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராஜா இன்னத்துரை, காலஞ்சென்ற சுப்பையா, இரத்தினம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, நாசராஜா, சிவநாதன் [பிரான்ஸ்], அருள்நாதன் [பிரான்ஸ்], திருமதி புனிதவதி பாலசுந்தரம் ஆகியோரின் தாயாரும், பாலசுந்தரம் [இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்], பரமேஸ்வரி, அம்பிகாவதி [பிரான்ஸ்], இராசாத்தி [பிரான்ஸ்], ஆகியோரின் மாமியாரும். பிறேம்ராஜ் [பிரான்ஸ்] சாந்தராஜ் [U K]. பிறேமலதா, மஞ்சுளா, தனராஜ், கோபிநாத், சிவாஜி, யாழினி, ரவி பாஸ்கரன், சுதாகரன், பிரபாகரன், சிறிகரன், கௌசல்யா, அனுஷியா ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [8-11-86] இல. 34, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலிருந்து துண்டி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். [C 5663]